**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.373/2023**

**Prosecution Witnesses :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : மீனா | Caste | : |
| Father 's Name / Husband Name | :மாரையா | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி காணொலி மூலமாக ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(30.07.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது கண்டுகுளத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் என் வீட்டிற்கு வெளியில் உள்ள பாத்ரூமில் குளித்துக் கொண்டிருந்தபோது யாரோ கதவை தட்டினார். சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்த அனைவரும் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தனர். எதிரி யார் என்று அக்கம் பக்ககத்தில் உள்ளவர்கள் விசாரித்ததில் அவர் வெளியூர்க்காரர் என்று சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். சம்பவம் குறித்து போலிசார் விசாரித்தததில் எதிரி மனநிலை குறைபாடு இருந்ததாக தெரிந்ததால் எழுதி வாங்கிவிட்டு அவரை அனுப்பி விட்டார்கள். அதில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதை நான்தான் எழுதினேன். **மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது**. சம்பவ சமயத்தில்

காணொலி வாயிலாக ஆஜரான எதிரியை தான் நான் புகார் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

என்னிடம் காட்டப்படும் புகாரை போலிசார் சொல்ல சொல்ல நான் எழுதினேன் என்றால் சரிதான். புகாரில் உள்ள விபரங்கள் போலிசாருக்கு தான் தெரியும் கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டேன். எனக்கு ஆபத்து என்று நினைத்துதான் பொதுமக்கள் வந்தார்கள் என்றால் சரிதான். வந்தவர்களில் எதிரி வெளியூர்க்காரர் என்பதால் தான் அவர் மீது சந்தேகத்தின் அடிப்படையில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.373/2023**
**Prosecution Witnesses :2**

| | | | |
|---|---|---|---|
| Name | : மாரையா | Caste | : |
| Father 's Name / Husband Name | : பெருமாள் (எ) சங்கர்நாயுடு | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி காணொலி மூலமாக ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(30.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது கண்டுகுளத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். காணொலி மூலமாக ஆஜரான எதிரியை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 25.04.2023ம் தேதி காலை சுமார் 9 மணியளவில் என் மனைவி மீனா என் வீட்டிற்கு வெளியில் உள்ள பாத்ரூமில் குளித்துக் கொண்டிருந்தபோது யாரோ கதவை தட்டினார். சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்த அனைவரும் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தனர். எதிரி யார் என்று அக்கம் பக்ககத்தில் உள்ளவர்கள் விசாரித்ததில் அவர் வெளியூர்க்காரரர் என்று சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். சம்பவம் குறித்து போலிசார் விசாரித்ததில் எதிரி மனநிலை குறைபாடு

இருந்ததாக தெரிந்ததால் எழுதி வாங்கிவிட்டு அவரை அனுப்பி விட்டார்கள் என போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி.** இல்லை

**மறுவிசாரணை.** இல்லை